## இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 செப்டம்பர் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 30.09.2019 ந் தேதி காலை 11.35 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் 1**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் செப்டம்பர் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.1007**– பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் 2**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் செப்டம்பர் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.1008**– பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் 3**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–11, இந்திரா நகரில் உள்ள பாதாள சாக்கடை கழிவு நீர் அகற்றும் நிலையம் அமைந்துள்ளது. மேற்படி கழிவுநீர் அகற்றும் நிலையத்தில் கழிவுகளை சேகரம் செய்வதற்கு அவ்விடத்தில் ஒரு பகுதியில் பிரத்யோக சேகரிப்பு மையம் (Waste Collection Centre) கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.12,80,000/– லட்சத்திற்கு பாதாள சாக்கடை நிதியின் மூலம் பணி மேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 2793/2019/இ1

**தீர்மானம் எண்.1009**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 4**

இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பாதாள சாக்கடை அடைப்பு எடுக்கும் லாரி வாகனம் Jed Raddng TN65–L–5922–க்கு 05.09.2019 அன்றுவுடன்

முடிவடைவதால் தகுதி சான்று பெறு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.94,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு – 1)</u>** மன்றம் அனுமதிக்கலாம்

2)பொது சுகாதாரம் பாதாள சாக்கடை என்பதினாலும், நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 2762/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1010</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 5</u>**

கோயம்புத்துார், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு இந்நகராட்சியில் இருந்து செலுத்த வேண்டிய 2019–2020ம் ஆண்டிற்கான சந்தா தொகை ரூ.50,000/– உடன் செலுத்துமாறு, மேற்படி நிறுவனத்திலிருந்து ந.க.எண்.648/2019/அ2, நாள்.30.07.2019ந் தேதி கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன்படி, கோயம்புத்துார் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு செலுத்த வேண்டிய ஆண்டுச் சந்தா (Annual Contribution) தொகையினை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3285/2017/பி1

**<u>தீர்மானம் எண்.1011</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 6</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பொதுசுகாதாரம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் வள்ளல் பாரி நடுநிலைப்பள்ளி மொத்தம் 798 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இம்மாணவிகளால் பயன்படுத்தப்படும் Hazardous Waste–யை அப்புறப்படுத்த சிரமமாக உள்ளதால், எரித்து சாம்பலாக்கும் பொருட்டு இரு பள்ளிகளிலும் தனித்தனியாக எரியூட்டும் இயந்திரம் விநியோகம் செய்வதற்கு 17.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் நடைபெற்றதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எரியூட்டும் இயந்திரம் ஒன்றின் விலை |
|---|---|---|
| 1 | G.V.ஏஜென்ஸிஸ்,<br>739/6, மகாலெட்சுமி நகர்,3–வது தெரு,<br>6th குறுக்குத் தெரு, கே.புதூர், மதுரை– 625 007 | ரூ.47,300/– |
| 2 | விகாஸ் ஏஜென்ஸிஸ்,<br>739/6, மகாலெட்சுமி நகர், 3வது தெரு,<br>குறுக்குத் தெரு, கே.புதூர், மதுரை– 625 007 | ரூ.49,300/– |

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1ல் கண்ட "G.V.ஏஜென்ஸிஸ், மதுரை" அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்வொந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 2774/2019/எச்1

**தீர்மானம் எண்.1012–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 7**

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2019–20, தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக மின் உபகரணங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 17.09.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | M/s.DARANI ASSOCIATE,<br>No.31, Thilak Nagar,<br>Iyyar Bunglow,<br>Madurai-625 014. | 3,00,000/– | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.Mahalakshmi Enterprises,<br>No.8,I-st Floor,<br>Evening Bazaar,<br>Chennai-600 003 | 3,00,000/– | 1.27% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.DARANI ASSOCIATE, No.31, Thilak Nagar, Iyyar Bunglow, Madurai-625 014, அவர்களது 0.15% சதவிகிதம் மதிப்பிட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)இப்பணி தெருவிளக்கு பராமரிப்பு என்பதால் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விநியோகம் செய்ய பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண். 2144/2019/இ1

**தீர்மானம் எண்.1013–** அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

**<u>பொருள் 8</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் லாரி TDR–4905 வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவடைந்து பழுதுப்பணிகள் மேற்கொள்ள 17.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>பேராவூர்(கி)<br>தேவிப்பட்டிணம்,<br>இராமநாதபுரம். | ரூ.85,101/- |
| 2 | ஸ்ரீவிக்னேஷ் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ்,<br>1, நியர் மகர்நோன்பு பொட்டல்,<br>கேணிக்கரை,<br>இராமநாதபுரம். | ரூ.91,296/– |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1ல் கண்ட "N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்'' இராமநாதபுரம் அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்வொந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு –</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.1014</u>**– அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் நகராட்சி பகுதிகளில் டெங்கு மற்றும் சிக்கன் குனியா போன்ற கொசுக்களால் பரவும் காய்ச்சலை தடுக்கும் பணிக்கு தேவையான கொசு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி 17.09.2019 அன்று நடைபெற்றதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | S.N.எண்டர் பிரைசஸ்,<br>பிளாட் எண்–6, க.எண்.1ஜி,<br>இராஜாஜி அவென்யூ, வளசரவாக்கம்,<br>சென்னை– 600 087. | ரூ.69,850/- |
| 2 | சிஸ்டம்ஸ் இன்ஜீனியரிங்,<br>1, அன்னை சத்யா நகர் மெயின் ரோடு, செந்தமிழ் நகர்,<br>சென்னை–600 089 | ரூ.69,500/– |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–2ல் கண்ட "சிஸ்டம்ஸ் இன்ஜீனியரிங்'' சென்னை அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைாக

இருப்பதால், இவ்வொந்தப்புள்ளியை மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u> –** மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2681/2019/எச்1)

**<u>தீர்மானம் எண்.1015</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 10</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொறியியல் பிரிவு, பாதாள சாக்கடை அடைப்பு எடுக்கும் லாரி வாகனம் Jed Radding TN65–L-5922–க்கு 05.09.2019 அன்று முடிவடைவதால் மேற்படி உள்ள வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள 20.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக விலை விகிதங்கள் வரப்பெற்றன. பார்வைக்கு

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|
| 1 | N.S.Auto Electrical Works,<br>202/3A,Peravoor Village,<br>Devipattinam(Via),<br>Ramanathapuam. | **93,905.60/–** |
| 2 | Sri Vignesh Engineering Works,<br>Near -Mahar Nonbu Tedal,<br>Kenikarai, Devipattinam Road,<br>Ramanathapuram. | **1,05,023/–** |
| 3 | A.R.Engineering works,<br>16/7c,A.K.S.Complex,<br>Near-B-1,Police Station,<br>G.H.Road,Ramanathapuram. | **1,13,124.60/–** |

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனமான “N.S.Auto Electrical Works, Ramanathapuam அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> – 1)** மன்றம் அனுமதிக்கலாம்

2) பாதாள சாக்கடை வாகனம் என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண். 2762/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1016</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 11**

இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு 2019–2020ஆம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பாரங்கள் பேரேடுகள் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கு ரூ.10,00,000/–த்திற்கு மன்றத் தீர்மான எண்.0944, தேதி.28.06.2019–அன்று பெறப்பட்டது. தற்போது கணிணி சம்மந்தமான சாமான்கள் மற்றும் டோனர்கள், திட்டப்பணிகளுக்கு தேவையான படிவங்கள், பாரங்கள், A4–சைஸ் பேப்பர் வாங்குவதற்கும் கூடுதலாக 2019–2020ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவினமான ரூ.5,00,000/–திற்கு (ஐந்து லட்சத்திற்கு) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.1017**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 12**

இராமநாதபுரம் நகராட்சி வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் குறித்து மாலைமலர் தமிழ் நாளிதழ் சார்பில் தொழில்மலர் 2019–ல் விளம்பரம் வெளியிட்டதற்கும், மற்றும் இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், நகராட்சியால் வழங்கப்படும் குடிநீரை, மின்மோட்டார் மூலம் உறிஞ்சுவதை கண்டறிந்து, பறிமுதல் செய்யப்பட்ட மின்மோட்டார்கள் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி வெளியிட்டதற்கு கீழ்க்கண்டவாறாக பட்டியல் தொகை வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | விளம்பரதாரர்கள் பெயர்கள் | பில் நம்பர் மற்றும் நாள் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலைமலர்–தமிழ் நாளிதழ்– மதுரை | Mdu D – 1908027, நாள்.31.08.2019 | 14,700/– |
| 2 | தினதந்தி, நாளிதழ், மதுரை | Mdu–1920-0013859, நாள்.02.09.2019 | 9,979/– |

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 3877/2014/இ1

**தீர்மானம் எண்.1018**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 13**

இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகர் பகுதிகளில், நகராட்சியால் வழங்கப்படும் குடிநீரை மின்மோட்டார் மூலம் உறிஞ்சுவபவரை கண்டறிந்து, பறிமுதல் செய்யப்பட்ட மின்மோட்டார்களை ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள 24.09.2019 அன்று பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக ஒப்பந்தப்புள்ளிதாரார்களிடமிருந்தும், வியாபார நிறுவனங்களிடமிருந்தும் விலை விகிதங்கள் வரப்பெற்றன.

| வரிசை எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்பள்ளி/ பொது ஏலதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரி | வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூ) | பொது ஏலம் கேட்கப்பட்ட அதிகப் பட்ச விலை விகிதம் (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.கே.சண்முகம்,<br>எண்–2, லேத்தம்ஸ் பங்களா ரோடு,<br>இராமநாதபுரம் | 25,000/– | – |
| 2 | குரு.ஆர்.வீரபாகு,<br>எண்.10/16, சுப்பையா தெரு,<br>இராமநாதபுரம். | 51,000/– | – |
| 3 | திரு.ஜி.குமார்,<br>எண்.158/56, இளங்கோவடிகள் தெரு,<br>இராமநாதபுரம். | 60,000/– | – |
| 4 | திரு.ஜி.மாரிமுத்து,<br>எண்–25, தாயுமானவர் சுவாமி கோவில் தெரு, இராமநாதபுரம் | 54,000/– | – |
| 5 | திரு.பி.ஜெய்சங்கர்,<br>பெரியாண்டவர் ஸ்டீல்,<br>43/7, சவேரியார் கோவில் தெரு,<br>இராமநாதபுரம். | 1,79,690/– | – |
| 6 | திரு.கே.மாரிமுத்து,<br>எண்.9/2–M,செம்மண்குண்டுத் தெரு,<br>இராமநாதபுரம். | 25,000/– | – |
| 7 | திரு.கே.குகன்,<br>எண்.76/4, தினமலர் நகர்,<br>இராமநாதபுரம். | 57,000/– | – |
| 8 | திரு.ஆர்.ஏ.பாஸ்கர்,<br>ஸ்ரீ அருணாச்சல டிரேடர்ஸ்,<br>கல்லூரணி,<br>அருப்புக்கோட்டை. | 1,40,000/– | – |
| 9 | M/s.V.M.P.Steels,<br>No.2/8-2A, மேலசத்திரம்,<br>பரமக்குடி. | 1,39,940/– | – |
| 10 | திரு.எஸ்.இராஜமாணிக்கம்,<br>எண்–6, வடக்கு தெரு,<br>இராமநாதபுரம். | 98,200/– | – |
| 11 | அதிர்ஷ்டம் டிரேடர்ஸ்,<br>எண்–9, பெரியார் பாலம்,<br>கீழ்புறம், மேல வெளி வீதி,<br>மதுரை–1 | – | 2,00,500/– |
| 12 | திரு.எம்.சாகுல் ஹமீது,<br>11/5, காயிதே மில்லத் நகர்,<br>கீழ வெளி வீதி,<br>மதுரை–1. | – | 1,55,000/– |
| 13 | திரு.கே.மனோகரன்,<br>சுப்பு தேவன் வலசை,<br>தெற்கு தரவை போஸ்ட்,<br>இராமநாதபுரம். | – | 2,00,000/– |
| 14 | திரு.ஏ.பாலமுருகன், | – | 1,51,000/– |

| | | | |
|---|---|---|---|
| | எண்–154, வண்டிக்காரத் தெரு, இராமநாதபுரம். | | |

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் ஒப்பு நோக்கியதில், பொது ஏலத்தில் அதிக பட்ச தொகை ரூ.2,00,500/– M/s.அதிர்ஷடம் டிரேடர்ஸ், எண்–9, பெரியார் பாலம் கீழ்தளம், மேல வெளி வீதி, மதுரை – 625 001 அவர்களது அதிக பட்ச ஏலக் கேள்வி எழுப்பட்டதை ஏற்று கொள்ளப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –பொது ஏலத்தில் எழுப்பப்பட்ட அதிக பட்ச தொகை கோரியுள்ள M/s.அதிர்ஷடம் டிரேடர்ஸ், எண்–9, பெரியார் பாலம் கீழ்புறம், மேல வெளி வீதி,, மதுரை–1 அவர்களது பொது ஏலத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2246/2019/இ1

**தீர்மானம் எண்.1019**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 14**

இராமநாதபுரம் நகராட்சி, தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பாதாள சாக்கடை திட்டம் ஆகிய இனங்களுக்கு மின் கட்டண நிலுவை தொகை “மே 2017 முதல் ஜீலை –2019” வரையிலான காலத்திற்கு மின் கட்டண நிலுவை தொகை ரூ.134.21/–லட்சம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக்கம் அவர்களுக்கு செலுத்த வேண்டிள்ளமையால், மேற்படி தொகையை மானியமாக வழங்க கோருவதற்கு மேலனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் எண்.3916/2019/பி3, நாள்.10.09.2019 அவர்களின் கடிதத்திற்கு கீழ்க்கண்டவாறாக மின் கட்டணம் நிலுவையாக உள்ளது.

| | தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பாதாள சாக்கடை திட்ட மின் விபரம் | கட்டண நிலுவை தொகை (ரூ) |
|---|---|---|
| தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், இராமநாதபுரம் | நகர் தெற்கு –05/2017 முதல் 07/2019 | 71,44,096/– |
| | நகர் வடக்கு –06/2017 முதல் – 07/2019 | 62,77,474/– |
| | மொத்தம் | 1,34,21,570/– |

மேற்கண்ட மின் கட்டண நிலுவை தொகையான ரூ.1,34,21,570/–ஐ மானியமாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான கடன் நிலுவைத் தொகை மற்றும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கடன் நிலுவைத் தொகை செலுத்த நேரிடுவதாலும் மற்றும் நகராட்சி நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால் மேற்கண்ட தொகையினை மானியமாக வழங்க நகராட்சி நிர்வாக ஆணையரை கோரிக்கை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 8030/2007/இ1

**தீர்மானம் எண்.1020**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 15**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–10, லெட்சுமிபுரம் ஊரணி மிகவும் முக்கியமான நீர்நிலை ஊரணியாகும். இந்த ஊரணி துார்வாரி மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிப்பில் உள்ளது. தற்போது மேற்கண்ட ஊரணியின் தெற்கு மற்றும் மேற்கு பகுதி கரைகள் மிகவும் சேதமடைந்துள்ளது. இதனை தடுக்கும் பொருட்டு கரைகளை பலப்படுத்த வேண்டியுள்ளது. எனவே ஊரணி பகுதியில் உள்ள மணல்களை (Hitachi) மூலம் அள்ளி கரைகளில் போட்டு, கரைகளை பலப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/–த்திற்கு பணி மேற்கொள்ள நகராட்சி பொது நிதியின் கீழ் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்; 3105/2019/இ1

**தீர்மானம் எண்.1021**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 16**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி–2019–20, Supply and Delivery of Sodium Hypochlorite Solution for Drinking Water Supply in Ramanathapuram Municipality விநியோகம் செய்யும் பணிக்கு 30.09.2019–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | M/s.ZENITH ENGINEERING, No-B-7/2, Housing Board Unit, K.K.Nagar, Madurai-625 020. | 5,00,000/– | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.SUXUS ENGINEERING, No-5/126, D-15 Sarani Apartments, Gomathipuram, Madurai-625 020. | 5,00,000/– | 1.27% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.ZENITH ENGINEERING,No-B-7/2, Housing Board Unit, K.K.Nagar,Madurai-625 020. அவர்களது 0.15% சதவிகிதம் மதிப்பிட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 2792/2019/இ1

**தீர்மானம் எண்.1022**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 17</u>**

இராமநாதபுரம் நகராட்சி, கல்வி நிதி 2019–2020, இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் ஆகியவற்றிற்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கும் பணிக்கு 27.09.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 4,00,000/– | 0.70% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 4,00,000/– | 1.55% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன், இராமநாதபுரம் அவர்களது 0.70% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2804/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1023</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 18</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், Pumping Room மோட்டார்களில் ஆப்ரேட்டர் செய்ய பம்ப் ஆப்ரேட்டர்கள் தனியார் மூலம் பணி அமர்த்தி மேற்கொள்ளும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மாண எண்.651, நாள்.28.06.2018–ல் ரூ.10.00/– லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பம்ப் ஆப்ரேட்டர் பணியாளர்களுக்கு தனியார் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு வழங்கும் மாத பட்டியல் தொகை 25.07.2018 முதல் 30.05.2019 வரையிலான மாதத்திற்கு ரூ.8,27,245/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட பணி, பாதாள சாக்கடை தொடர் பணியாக செயல்படும் காரணத்தால் அதற்குரிய கூடுதல் செலவினம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. எனவே மாத ஊதியம் கூடுதல் செலவினம் 2019–2020க்கான ரூ.10.00/– லட்சத்திற்கு பாதாள சாக்கடை நிதியின் கீழ் மூலம் பணி மேற்கொள்ளும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2177/2018/இ1

**<u>தீர்மானம் எண்.1024</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 19**

இராமநாதபுரம் நகராட்சி, அவசர அவசியம் கருதி சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் 01.09.2019 முதல் 30.09.2019 வரையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக செலவினம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகம், சவேரியார் கோவில் தெரு மற்றும் சுவாமி விவேகானந்தர் சாலை சந்திப்பு வரை உள்ள பிரதான பகிர்மான குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளதை சரிசெய்து கொடுக்கும் பணி முடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.48,640/– |
| 2) | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடைத் திட்டம் 2018–19, இந்திரா நகர் கழிவுநீர் நிலையம் மின் மோட்டார் 75HP,40 HP –unit-I , 40 HP –unit-II ஆகியவை பழுதாகியுள்ளதற்கு பழுதுநீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கப்பட்டு உள்ளதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.3,79,550/– |
| 3) | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக பயன்பாட்டிற்கு ஆணையாளர் அவர்களால் பயன்படுத்தப்படும் CUC No–73973 82164– அலைபேசி எண்ணுக்கு புதிய தொலைபேசி Redmi விநியோகம் செய்யப்பட்டுள்ளதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.12,500/– |
| 4) | இராமநாதபுரம் நகராட்சி, கணிணி பிரிவில் Smps (Switched mode Power Supply) பழுதாகியுள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கும் பணிமுடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.18,600/– |
| 5) | இராமநாதபுரம் நகராட்சி, உள்ளாட்சி தேர்தல் 2019, மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தியிலிருந்து ABT தனியார் லாரி மூலம் ஏற்றி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்தமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.23,000/– |
| 6) | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக ஈப்பு வாகனம் TN65-AF–4353 வாகனத்திற்கு "Fifth Service" பணிமேற்கொண்டதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.12,135/– |

**அலுவலக குறிப்பு–** தமிழ்நாடு மாறிய நகராட்சி சட்டம் 1920–விதி 15–ன் கீழ் மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பதிவேடு பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.877/2016/இ1

**தீர்மானம் எண்.1025–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி